DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE

KANYAKUMARI AT NAGERCOIL

Calendar

Miscellaneous

Preliminary Register

Session Case S.C.No. 79/2024

Prosecution Witness -P.W. 4

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மணிகண்டன் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | நாவல்காடு |
| Taluk | : | தோவாளை |
| Caste | : | கிறிஸ்தவ சாம்பவர் |
| Calling | : | - |
| Religion | : | கிறிஸ்டின் |
| Age | : | 46 |
| Date | : | 12.08.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

12.08.2024

முதல் விசாரணை:-

நான் நாவல்காட்டில் மன்றார்புரத்தில் வசிக்கிறேன். நான் கொத்தவேலை

செய்கிறேன். அ.சா.3 எனது மனைவி. ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் பெயர் ரிச்சர்டு. 21.08.2023 அன்று நானும் எனது மனைவியும் மாலை 6.30 மணியளவில் நாகர்கோவில் போனோம். எங்கள் ஊரில் ஒரு கல்யாணம் இருந்தது. அதற்காக பரிசுப்பொருள் வாங்க வந்தோம். வாங்கிவிட்டு இரவு 8.45 மணியளவில் நாகர்கோவில் பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறி நாவல்காடு பஸ் ஸ்டாண்டிற்கு வந்தோம். நாவல்காடு பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸில் இருந்து இறங்கினோம். பஸ்ஸில் இருந்து இறங்கி மேற்குபார்த்து நடந்து சென்றோம். அப்போது ராபர்ட் மேற்கில் இருந்து கிழக்காக வந்துகொண்டிருந்தார். எதிரி கிழக்கில் இருந்து மேற்காக வந்து கொண்டிருந்தார். 2 பேரும் பைக்கில் வந்தார்கள். ரிச்சர்டு வந்த பைக்கில் 2 குழந்தைகளும் இருந்தார்கள். அவர் அப்போது கல்யாண வீட்டிற்கு போய் கொண்டிருந்தார். அப்போது ராபர்ட் கெட்ட வார்த்தை சொல்லி ரிச்சர்டை ஏசினார். ரிச்சர்டை ராபர்ட் என்ன செய்து விடுவாய் என கேட்டார். 2 பேருக்கும் வாக்கு தகராறு வந்தது. ரிச்சர்டு மேற்கு பார்த்து போய்விட்டார். கல்யாணத்தில் சாப்பிட்டு விட்டு இதோ வாரேன் என சொல்லிவிட்டு குழந்தைகளை கூட்டிக் கொண்டு ரிச்சர்டு போய்விட்டார். மண்டபத்திலும் ரிச்சர்டுக்கும் ராபர்ட்டுக்கும் சண்டை வந்தது. அங்கிருந்து வண்டி டேங்க் கவரில் அருவாளை வைத்துக் கொண்டு சால்வேஷன் ஆர்மி சர்ச் மேற்கு பக்கம் பைக்கில் ரிச்சர்டு வந்து கொண்டிருந்தார். ராபர்ட் மேற்கில்

இருந்து பைக்கில் கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தார். ரிச்சர்டு ராபர்ட்டை நில்லுலே என்று சொன்னார். என் குடும்பத்தினர் மீது இனி சண்டைக்கு வரக் கூடாது என்று ராபர்ட்டிடம் சொன்னார். ராபர்ட் நான் எதுக்குடா வரப்போறேன், நீதான திரும்பவும் என்கிட்ட சண்டைக்கு வர என சொன்னார். என்ன செய்திடுவ என ராபர்ட் கேட்டார். வண்டி டேங்க் கவரில் இருந்து அருவாளை எடுத்து ரிச்சர்டு ராபர்ட்டின் தலையில் வெட்டினார். அப்போது ராபர்ட் இடது கையால் தடுத்தார். இடது கை மணிக்கட்டில் வெட்டு பட்டு கை துண்டாக போய்விட்டது. அதன் பின் இடது கன்னத்தில் ரிச்சர்டு ராபர்ட்டை வெட்டினார். இடது வயிறு பக்கத்திலும் வெட்டினார். வலது பின்பக்கத்திலும் வெட்டினார். மக்கள் கூடிவிட்டார்கள். நானும் மனைவியும், தமிழ்ச்செல்வன், ஷர்பின் மார்ஷல், வசந்தா அக்கா ஆகியோர் பார்த்தோம். எதிரி அங்கிருந்து கூட்டத்தைப் பார்த்ததும் பைக்கில் அருவாளை எடுத்துக் கொண்டு போய்விட்டார். தமிழ் ஆம்புலன்சுக்கு போன் செய்தார். என் மனைவி போலிசுக்கு போன் செய்தார். வெட்டுப்பட்டவர் தண்ணீர் கேட்டார். தண்ணீர் கொடுத்தோம். ஆம்புலன்சும் வந்து விட்டது. ஆம்புலன்சில் இருந்தவரும் மார்ஷலும் வெட்டுப்பட்டவரைத் தூக்கி ஆம்புலன்சில் வைத்தார்கள். வெட்டுப்பட்ட கையையும் ஆம்புலன்சில் எடுத்துச் சென்றார்கள். ராபர்ட் இடையிலேயே இறந்து விட்டார் என சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.4 அருவாள் அப்போது எதிரி

பயன்படுத்தியதுதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ.5 லுங்கி இறந்து போன ராபர்ட் அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் சா.பொ.6 சட்டை அப்போது ராபர்ட் அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 சட்டையும் சா.பொ.2 வேட்டியும் சம்பவம் போது ரிச்சர்டு அணிந்திருந்தார். அந்த இடத்தில் ரிச்சர்டு அணிந்திருந்த செருப்பும் கிடந்தது. என்னிடம் காட்டப்படும் செருப்பு ரிச்சர்டு அணிந்திருந்தது தான். அந்த செருப்பு ஒரு ஜோடி சா.பொ.7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் நடந்தது இரவு 9.30 மணி இருக்கும். அப்போது தெரு விளக்கு வெளிச்சத்தில் சம்பவத்தை நாங்கள் பார்த்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தேன். ஆய்வாளர் இந்த வழக்கு குறித்து என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு நாவல்காடுதான் சொந்த ஊரா என்றால் ஆமாம். எனது மனைவி ரிலையன்ஸ் ஷாப்பிங் மாலில் வேலைக்கு சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். 21.08.2023 அன்றும் எனது மனைவி வேலைக்கு சென்றிருந்தார் என்றால் சரிதான். 22.08.2023 அன்றும் எனது மனைவி வேலைக்கு சென்றிருந்தார் என்றால் சரிதான். எனது மனைவி காவல் நிலையத்திற்கு சம்பவம் குறித்து போன் செய்தார் என்று நான்

தற்போது சொன்ன விவரத்தை போலிசார் விசாரிக்கும்போதும் பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும் போதும் சொன்னேனா என்றால் சொன்னேன். கல்யாண மண்டபத்தில் வைத்தும் ராபர்ட்டிக்கும் ரிச்சர்டுக்கும் சண்டை நடந்தது என்ற நான் தற்போது சொன்ன விவரத்தை போலிசார் விசாரிக்கும்போதும் பூதப்பாண்டி நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்கும் போதும் சொன்னேனா என்றால் சொன்னேன். 21.08.2023 அன்று இரவு 9.30 மணிக்கு இறந்து போன ராபர்ட் என்கிற நெல்சன் ரிச்சர்டுடன் முதலில் சண்டை இழுத்து அதன் பிறகு ரிச்சர்டு கல்யாண மண்டபத்திற்கு சென்று சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு சென்றால் என்ற விவரத்தை போலிசார் விசாரிக்கும்போதோ பூதப்பாண்டி நீதிமன்றத்திலோ சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்றால் 2 ஆண் 1 பெண் உள்ளது. நான் தற்போது சொன்ன சாட்சியம் அனைத்தும் நான் பார்த்தவை தான் சொன்னேனா என்றால் சரிதான். நான் இறந்துபோன ராபர்ட்டுக்கு வேண்டிய நபர் மற்றும் உறவினர் என்பதால் நான் பார்க்காத ஒரு சங்கதியை பார்த்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்க்காததைப் பற்றி பார்த்ததாக பொய்யாக சாட்சி அளிப்பதால் தான் இந்த நீதிமன்றத்தில் ஒரு மாதிரியும் பூதப்பாண்டி நீதிமன்றத்திலும் போலிஸ் விசாரணையிலும் வேறு மாதிரியும் கூறி விவரங்கள் தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை

பார்க்காததால் தான் எதிரி தன் குழந்தைகளையும் அப்போது கூட்டி வந்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.